**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**முன்னிலை : க. முனுசாமி, எம்.ஏ., எம்.எஸ்.சி., எம்.பி.ஏ., பி.எட்., எம்.பில்.,**
**ந.க.எண்.1426/மாஒ5/ஒபக/IE/2022, நாள்: 10.11.2022**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் 2022–2023 –ம் கல்வி ஆண்டு – மாற்றுத்திறனாளி குழ்ந்தைகளை கண்டறிதல் மற்றும் பள்ளியில் சேர்த்தல் குறித்த மாபெரும் தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் – மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ஏதுவான சூழலை ஏற்படுத்தும் நோக்கில் விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை பண்பாட்டு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளுதல் நிதி விடுவித்தல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – சார்பு.

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை அவர்களின் ந.க.எண்.4600/ஆ8/உள்ளடக்கிய கல்வி/ஒபக/2022, நாள்:08.11.2022.

-------

பார்வையில் கண்ட மாநிலத் திட்ட இயக்குநர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி சென்னை அவர்களின் கடித்த்தின்படி, தமிழக அரசின் பள்ளி கல்வித் துறையானது குழந்தைகளின் வளர்ச்சிக்காக பல்வேறு நலத்திட்டங்களையும், 'எண்ணும் எழுத்தும்', 'இல்லம் தேடிக் கல்வி' மற்றும் 'நான் முதல்வன்' போன்ற சிறப்புமிக்க திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. அனைத்து குழந்தைகளும் தரமான கல்வியை பெறுவதை உறுதி செய்யும் நோக்குடன், "உள்ளடக்கிய கல்வியையும்" வழங்கி வருகிறது. மேலும், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான தனி நபர் கல்வித்திட்டம் (IEP) மூலம் அவரவர் நிலைக்கேற்ற இலக்கை வடிவமைத்து அவர்களுக்கு சிறப்பு கல்வி அளித்தும், அவர்களின் முன்னேற்றத்தினையும் பங்கேற்பினையும் உறுதி செய்யும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்தக் கல்வி ஆண்டில் சுமார் 1.3 லட்சம் மாற்றுத்திறனானி குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கல்வி, அனைத்து குழந்தைகளுக்குமான உரிமை. ஆகவே, எந்த குழந்தைக்கும் கல்வி விடுபடக்கூடாது என்பதை உறுதிசெய்யும் விதமாக மாநிலம் முழுவதும் மாற்றுத்திறனாளி குழந்தைகளை கண்டறிந்து, அவர்களை பள்ளியில் சேர்த்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை மேற்கொள்ளவும் மாநில அளவில் திட்டமிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளி குழந்தைகளை முன்கூட்டியே அடையாளம் காண்பதன் முக்கியத்துவத்தையும், சமுதாயத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வையும், பொதுமக்களிடையே இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மாநிலம் முழுவதுமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், மாற்றுத்திறனாளி குழந்தைகளின் திறமைகளை வெளிக்கொணரும் விதமாகவும் நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 3ஆம் தேதி "உலக மாற்றுத்திறனாளிகள் தினம்" கொண்டாடப்படும் நிலையில், நவம்பர் 14ஆம் தேதி முதல் டிசம்பர் 3ஆம் தேதி வரை பல்வேறு விதமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த மாநில அளவில் திட்டமிடப்பட்டுள்ளது. இதனை களஅளவில் சிறப்பான முறையில் செயல்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள்

- உறுதிமொழி எடுத்தல்
- விழிப்புணர்வு பேரணி
- "இணைவோம் மகிழ்வோம்" – பள்ளி அளவிலான நிகழ்ச்சிகள்
- ஒருங்கிணைந்த விளையாட்டுப் போட்டிகள்
- ஒருங்கிணைந்த கலை மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகள்
- சிறார் திரைப்படங்கள்
- சைகை மொழி தமிழ்த்தாய் வாழ்த்து

## நிகழ்ச்சியின் விவரம்

1. **உறுதிமொழி எடுத்தல்**

விழிப்புணர்வின் துவங்க நிகழ்ச்சியாக நவம்பர் 14ஆம் தேதி "உறுதிமொழி ஏற்றல்" அனைத்துப் பள்ளிகளிலும் நடைபெறும். தலைமை ஆசிரியர், உறுதிமொழி எடுத்தல் நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், எழுத்தாளர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், விளையாட்டு வீரர்கள், சாதனையாளர்கள் போன்றோரை வரவழைத்து உறுதிமொழியினை ஏற்று மாணவர்களுக்கு இதுகுறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும்.

மேலும், 'கல்வி அனைத்து குழந்தைகளுக்குமான உரிமை' என்பதாலும், அக்கல்வியினை அனைத்து குழந்தைகளுக்கும் சமமாக கிடைக்கப்பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த நிகழ்வு நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.

நவம்பர் 14ஆம் தேதி, அனைத்துப் பள்ளிகளிலும் காலை வணக்கக்கூட்டத்தில் இந்த உறுதிமொழி எடுத்தல் நிகழ்ச்சி நடைபெற வேண்டும். (உறுதிமொழி இணைக்கப்பட்டுள்ளது.)

2. **விழிப்புணர்வு பேரணி:**

மாற்றுத்திறனாளி குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நவம்பர் 16ஆம் தேதி விழிப்புணர்வு பேரணி நடைபெறும். ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஏதேனும் இரண்டு குறுவளமையங்களில், ஒரு மேல்நிலை அல்லது உயர்நிலை பள்ளியில் உள்ள 6 முதல் 9 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், உள்ளூர் தலைவர்கள், மருத்துவர்கள் போன்றோர் இதில் பங்கேற்கலாம். ஆரம்பக்கால கட்டத்திலேயே மாற்றுத்திறனாளி குழந்தைகளைக் கண்டறிதல், அக்குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல் ஆயிகவற்றை வலியுறுத்தும் விதமாக பதாகைகள் ஏந்தி, முழுக்கங்கள் எழுப்பி நிகழ்வுகள் நடைபெறும். செய்தி மற்றும் ஊடகங்கள் வாயிலாக இந்த நிகழ்ச்சிகள் ஒளிபரப்புவதின் மூலம் பொதுக்களிடையே விழிப்புணர்வு ஏற்படும்.

"வடகிழக்கு பருவமழையை கருத்தில் கொண்டு இந்நிகழ்ச்சி நடைபெற இயலவில்லையெனில் பள்ளி வளாகத்திறகுள்ளாகவே நடத்தப்படவேண்டும்.

மாநில அளவில் வடிவமைக்கப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கான பேனர் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பதாகைகளில் எழுதவேண்டிய வாசகங்கள் இணைக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் கூடுதலான வாசகங்களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

இந்த நிகழ்ச்சிக்காக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தலா ரூபாய் 5000/- நிதி விடுவிக்கப்படும். இந்த நிதியை, தெரிவு செய்யப்பட்ட இரண்டு பள்ளிகளுக்கு தலா ரூபாய் 2500/- வீதம் விடுவித்தல் வேண்டும். இந்த நிதியினை, விழிப்புணர்வு பேரணிக்கான பேனர் அச்சிடுதல், பதாகைகள் செய்ய தேவையான பொருட்களை வாங்குதல் மற்றும் பேரணியில் பங்கேற்பவர்களுக்கு தேநீர், தின்பண்டங்கள் வழங்கவும் பயன்படுத்துதல் வேண்டும். தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளின் விவரம் மாவட்டத் திட்ட அலுவலகத்திற்கு முன்னதாகவே தெரிவிக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளி குழந்தைகளை கண்டறிந்து, அவர்களை பள்ளியில் சேர்த்து அவர்களுக்கு ஏதுவான சூழலை ஏற்படுத்தும் விதத்தில் மேற்கொள்ளப்படும். இச்செயல்பாடுகளை உள்ளடக்கிய கல்வி தொடக்கநிலை பிரிவில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஏதுவான சூழல் ஏற்படுத்தும் திட்டத்திற்கென (Environment Building Program) ஒதுக்கப்பட்டுள்ள நிதியின்கீழ் மேற்கொண்டு PRABANDH Portal லில் பதிவு செய்ய வேண்டி உள்ளதால் உரிய முறையில் செலவினங்கள் மேற்கொண்டு அதற்கான பற்றுச்சீட்டுகள் பராமரிக்க வேண்டும்.

**Block wise fund allotment for Environment Building Programme (Elementary)**

| Sl.No | Blocks | Amount Alloted per Block |
|---|---|---|
| 1. | Anaicut | 5000 |
| 2 | Gudiyatham | 5000 |
| 3 | Katpadi | 5000 |
| 4 | Kaniyambadi | 5000 |
| 5 | K.V.Kuppam | 5000 |
| 6 | Pernambut | 5000 |
| 7 | Vellore Rural | 5000 |
| 8 | Vellore Urban | 5000 |
| | Total | 40000 |

## 3. இணைவோம் மகிழ்வோம் – பள்ளி அளவிலான செயல்பாடுகள்

மாற்றுத்திறனாளி குழந்தைகளை பள்ளியில் சேர்க்கும் நோக்கத்தை வலியுறுத்தும் வகையில் பள்ளி அளவிலான செயல்பாடுகள் அமைதல் வேண்டும். பல்வேறு விதிமான விழிப்புணர்வு நிகழ்வுகள் மூலம் பள்ளி சேர்க்கை நடைபெற வேண்டும். நவம்பர் 17ஆம் தேதி காலை வணக்கக்கூட்டத்தில் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி, முழக்கங்கள் எழுப்பி சிறப்பான முறையில் நடைபெறுதல் வேண்டும். உள்ளூர் தலைவர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் போன்றோரை வரவழைத்து நிகழ்ச்சிகளை நடத்துதல் வேண்டும். நிகழ்ச்சிகளில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் பங்கேற்பு மிகவும் முக்கியமானது. ஏனெனில், ஆரம்பக்கால கண்டறிதலின் முக்கியத்துவத்தை அனைவரிடமும் பேசி வலியுறுத்த அது நல்வாய்ப்பாக அமையும்.

பள்ளிகளில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை பண்பாட்டு நிகழ்ச்சிகளில் மாற்றுத்திறனாளி மாணவர்களின் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும். சக மாணவர்களோடு இணைந்து விளையாடக்கூடிய விளையாட்டுகளில் அவர்களை பங்கேற்க வைக்க வேண்டும்.

"இணைவோம் மகிழ்வோம்" நிகழ்வானது பள்ளி மாணவர்கள் சக மாணவர்களுடன் குறிப்பாக மாற்றுத்திறனாளி மாணவர்களுடனான நட்பை

வலுப்படுத்தும் விதமாக அமைதல் வேண்டும். வகுப்பறைகளில் பெரிய தாள்களை (chart paper) ஒட்டி அதில் மாணவர்கள் தங்கள் சக மாற்றுத்திறனாளி மாணவர்களைப் பற்றிய நேர்மறையான எண்ணங்களை எழுதச் செய்தல் வேண்டும். மாற்றுத்திறனாளி மாணவர்களும் அதுபோல செய்தல் வேண்டும். இதன் வழியாக மாணவர்களுடனான நட்பு வளரும். மேலும், மாற்றுத்திறனாளி மாணவர்களிடையே தன்னம்பிக்கை உயரும். இந்த நிகழ்வுகள் நவம்பர் 17 ஆம் தேதி நடத்தப்பட வேண்டும்.

கலை நிகழ்ச்சிகளின் ஒரு அங்கமாக காகிதப்பறவை செயல்பாட்டை நவம்பர் 22 ஆம் தேதி நடத்துதல் வேண்டும். இந்த செயல்பாட்டை மாற்றுத்திறனாளி குழந்தைகள் தனி நபராகவோ அல்லது சக மாணவர்களோடு இணைந்தோ செய்தல் வேண்டும். மாற்றுத்திறனாளி குழந்தைகள் சக மாணவரோடு அவரவர் திறனுக்கு தகுந்தபடி காகித்தை வெட்டுதல், மடித்தல், ஒட்டுதல் போன்ற செயல்பாடுகளை செய்வதை ஊக்குவித்தல் வேண்டும். (இச்செயல்பாட்டிற்கான வழிமுறைகள் இணைக்கப்பட்டுள்ளது)

நம்மில் வேற்றுமையை ஒழித்து, மாற்றுத்திறன் வேற்றுத்திறன் அல்ல என்பதை பறை சாற்றும் விதமாக ஒரு வெள்ளைத் தாளில் (வெள்ளை பேப்பர்) மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் கை அச்சினை வண்ணங்கள் பூசி பதிக்க வேண்டும். இதை பள்ளியின் அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தலாம். மாற்றுத் திறனாளிகளை நம் சமூகத்தில் இணைத்தால் அனைவரும் மகிழ்வோம் என்பதை நினைவூட்ட இது ஏதுவாக அமையும். நவம்பர் 22ஆம் தேதி இச்செயல்பாட்டினை நடத்துதல் வேண்டும்.

## 4. ஒருங்கிணைந்த விளையாட்டு நிகழ்வுகள்

மாற்றுத்திறனாளி குழந்தைகளை ஊக்குவிக்கவும், அவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் விதத்திலும் விளையாட்டு போட்டிகள் IE–மைய அளவில் நவம்பர் 29ஆம் தேதி நடத்தப்படவேண்டும். இதனை தொடர்ச்சியாக செய்யும் நோக்கில், பள்ளிகளில் விளையாட்டு வகுப்பு நேரத்தில் மாற்றுத்திறனாளி குழந்தைகளோடு மற்ற குழந்தைகளும் சேர்ந்து விளையாடும் விதிமுறைகளோடு கொண்ட விளையாட்டுகளை நடைமுறைப்படுத்துவதற்கு உறுதி செய்தல் வேண்டும்.

விளையாட்டு போட்டிகளுக்கான பட்டியல் பின்னர் அனுப்பப்படும். இந்த பட்டியலுக்கு அப்பாற்பட்டு வேறு சில போட்டிகளையும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் இயன்முறை மருத்துவர்கள் தங்களுடைய ஒன்றியங்களில் இருக்கின்ற வளங்களை பயன்படுத்தி போட்டிகளை நடத்திக்கொள்ள வேண்டும்.

IE–மையங்களில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் குறைந்தபட்சம் 30 மாற்றுத்திறனாளி குழந்தைகளாவது பங்கேற்க வேண்டும். இந்நிகழ்வில் பங்கேற்கும் குழந்தைகளின் வருகையை முறையாக பதிவு செய்து IE–மையம் மற்றும் BRC –யில் பராமரிக்க வேண்டும். ஒவ்வொரு மையத்திற்கும் ரூபாய் 7000/– ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை பயன்படுத்தி போட்டிகளில் பங்கேற்கும் அனைத்து மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கும் மதிய உணவு, தேநீர், சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட வேண்டும். இந்த நிதியை பயன்படுத்தி பேனர் (Size

6x4) அச்சிடுதல் வேண்டும். (மாநில அளவில் சான்றிதழ் மற்றும் பேனர் வடிவமைக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

விளையாட்டு போட்டிகளில் சிறப்பாக செயல்படும் குழந்தைகளை தெரிவு செய்து அவர்களை மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்பதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் பொருட்டு, இந்த் தகவல்களை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்திற்கு அளித்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் பொருட்டு மாணவர்களின் பெயர்ப்பட்டியல் மாவட்டத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் செயல்பாட்டிற்கான செலவினம், Sports/Exposure visit என்ற தலைப்பின்கீழ் தொடக்க நிலையளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபாய் 2000/- மற்றும் உயர்நிலையளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபாய் 5000/- ஆக மொத்தம் ஒரு மையத்திற்கு ரூ.7000/- வீதம் 8 வட்டார வளமையங்களில் செலவினம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

இச்செயல்பாடுக்கான செலவீனத்தை Sports/Exposure visit (Elementary and Secondary) ஆகிய தலைப்புகளின் கீழ் மேற்கொண்டு, அதனை PRABANDH Portal லில் பதிவு செய்தல் வேண்டும்.

**Inclusive Education – 2022-2023 fund allotment for Sports & Exposure visit**

| Sl.No | Blocks | Elementary | Secondary | Total Amount Alloted per Block |
|---|---|---|---|---|
| 1. | Anaicut | 2000 | 5000 | 7000 |
| 2 | Gudiyatham | 2000 | 5000 | 7000 |
| 3 | Katpadi | 2000 | 5000 | 7000 |
| 4 | Kaniyambadi | 2000 | 5000 | 7000 |
| 5 | K.V.Kuppam | 2000 | 5000 | 7000 |
| 6 | Pernambut | 2000 | 5000 | 7000 |
| 7 | Vellore Rural | 2000 | 5000 | 7000 |
| 8 | Vellore Urban | 2000 | 5000 | 7000 |
| Total | | 16000 | 40000 | 56000 |

## 5. ஒருங்கிணைந்த கலை மற்றும் பண்பாட்டு நிகழ்வுகள்

மாற்றுத்திறனாளி குழந்தைகளின் கலைத்திறன்களை வெளிக்கொணரும் விதமாக கலை மற்றும் பண்பாட்டு நிகழ்வுகள் IE-மைய அளவில் நடத்தப்பட வேண்டும். குழந்தைகள் தங்களுக்கு தெரிந்த நடன அசைவுகளை தனியாகவோ அல்லது குழுவாகவோ சேர்ந்து செய்ய வேண்டும். இந்நிகழ்வுகள் நவம்பர் 25 ஆம் தேதி அன்று IE மையங்களில் திட்டமிட்டு நடத்தப்பட வேண்டும். கலை மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கான அட்டவணை பின்னர் அனுப்பி வைக்கப்படும். இனிவரும் காலங்களில் IE-மையத்திற்கு வரும் குழந்தைகளுக்கு அவர்கள் வரும் நாட்களில் ஒரு

பருவத்திற்கு ஒரு முறையாவது இதுபோன்ற கலை மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு நடத்தப்பட வேண்டும்.

மேலும், இதன் தொடர்ச்சியாக பள்ளிகளில் நடைபெறும் அனைத்து கலை மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளிலும் மாற்றுத்திறனாளி குழந்தைகள் மற்ற குழந்தைகளோடு இணைந்து பங்கேற்பதை பள்ளியளவில் உறுதி செய்ய வேண்டும்.

## 6. சிறார் திரைப்படம் திறையிடுதல்

டிசம்பர் 2ஆம் தேதியன்று மாற்றுத்திறன் தொடர்பான திரைப்படம் தமிழகத்திலுள்ள அனைத்து நடுநிலை, மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக திரையிடப்பட வேண்டும் என்று பார்வையில் கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரபலங்கள், உள்ளூர் தலைவர்களைக் கொண்டு இந்நிகழ்வுகளை நடத்தலாம். மாற்றுத்திறனாளி குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வை அனைத்து குழந்தைகளுக்கும் ஏற்படுத்தும் விதமாக இத்திரைப்படம் அமையும், அப்படத்தை திரையிடுவதற்கு முன்பு, மாற்றுத்திறனாளிகள் குறித்து ஒரு சிறிய விளக்கவுரை அளித்தல் வேண்டும். திரையிட்டபின் அப்படத்தின் மைய கருத்தினை மாணவர்களிடையே வலியுறுத்தி இதன் மூலம் மாணவர்களிடையே மாற்றுத்திறனாளிகள் மற்றவர்களைப் போலவே சாதிக்கக்கூடிய திறன் கொண்டவர்கள் என்பதை புரிந்து கொள்ள செய்தல் வேண்டும். மேலும், இது மாற்றுத்திறனாளி மாணவர்களுடன் சக நண்பர்களாக பழகும் தளத்தை உருவாக்கும் நல்வாய்ப்பாக அமைதல் வேண்டும்.

## 7. சைகை மொழி தமிழ்த்தாய் வாழ்த்து

டிசம்பர் 3ஆம் தேதி "உலக மாற்றுத்தினாளி தினத்தன்று" தமிழ்த்தாய் வாழ்த்து சைகை மொழி வாயிலாக அனைத்து பள்ளிகளிலும் பாடப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. சைகை மொழி தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் ஒரு பதிவு செய்யப்பட்ட காணொளியாக பள்ளிகளுக்கு முன்னரே வட்டார வளமையங்கள் மூலமாக கொடுக்கப்படும். தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சைகை மொழி தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலை பயிற்சி செய்து, பின்னர் டிசம்பர் 3 ஆம் தேதியன்று காலையில் நடைபெறும் கூட்டத்தில் பாட வேண்டும். பயிற்சி எடுத்த போதிலும், இந்த சைகை பாடலை மேலும் சிறப்பாக பாடும் நோக்கத்தில் பள்ளிகள் இந்த சைகை பாடலை திரையில் கண்டு பாட அது மிகவும் பயனுள்ளதாக அமையும். இனிவரும் காலங்களில், ஒவ்வொரு மாதத்திலும் ஏதேனும் ஒரு நாளில் பள்ளியில் காலை வணக்கக்கூட்டங்களில் இந்த சைகை பாடலைப் பாடலாம்.

### விழிப்புணர்வு நிகழ்வுகளின் அட்டவணை

| தேதி | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| 14.11.2022 | உறுதிமொழி எடுத்தல் | அனைத்துப் பள்ளிகள் |
| 16.11.2022 | விழிப்புணர்வு பேரணி | வட்டாரத்திற்கு இரண்டு குறுவன மையத்தில் உள்ள ஒரு மேல்நிலை அல்லது உயர்நிலைப் பள்ளி |
| 17.11.2022 | இணைவோம் மகிழ்வோம் | அனைத்துப் பள்ளிகள் |
| 22.11.2022 | கலை நிகழ்வு (காகித பறவை) | அனைத்துப் பள்ளிகள் |
| 25.11.2022 | கலை நிகழ்வு (நடனம்) | IE மையங்கள் |

| | | |
|---|---|---|
| 29.11.2022 | விளையாட்டுப் போட்டிகள் | IE மையங்கள் |
| 02.12.2022 | சிறார் திரைப்படம் திரையிடுதல் | அனைத்துப் பள்ளிகள் |
| 03.12.2022 | சைகை மொழி தமிழ்த்தாய் வாழ்த்து | அனைத்துப் பள்ளிகள் |

## விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கான கூடுதல் விவரங்கள்

1. **உறுதிமொழி எடுத்தல்**
    a. உறுதிமொழி வாசகங்கள் அனைத்துப் பள்ளிகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும்..
    b. மாற்றுத்திறனாளி மாணவர்களின் பங்கேற்பை பள்ளிகள் உறுதி செய்ய வேண்டும்.
    c. அனைத்து நிகழ்ச்சிகளிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களை பங்கேற்கச் செய்தல் வேண்டும்.
    d. சிறப்பு விருந்தினர்கள் நிகழ்ச்சிகளில் பங்கேற்க அழைக்கப்பட வேண்டும்.
    e. சாத்தியமெனில், மாற்றுத்திறன் கொண்டோரையும் சிறப்பு விருந்தினராக அழைக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.
2. **விழிப்புணர்வு பேரணி**
    a. 6x4 என்ற அளவில் பேனர் அச்சிடப்பட்டு விழிப்புணர்வு பேரணியில் பயன்படுத்தப்பட வேண்டும். நிகழ்ச்சி முடிந்த பின்னர் பேனரை பள்ளி நுழைவு வாயிலில் காட்சிப்படுத்த வேண்டும்.
    b. 6–9ஆம் வகுப்புகளில் உள்ள மாணவர்கள் மட்டும் பங்கேற்க வேண்டும்.
    c. பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள், உள்ளூர் தலைவர்கள், ஆகியோர் பேரணி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும்.

## இணைவோம் மகிழ்வோம்

3. **விளையாட்டு நிகழ்வுகள் –**
    a. அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள போட்டிகள் மட்டுமல்லாது வேறு பல போட்டிகளையும் நடத்திக்கொள்ளலாம்.
    b. 6x4 என்ற அளவில் பேனர் அச்சிடப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.
    c. உள்ளூர் வளங்களைக் கொண்டு குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கலாம்.
4. **கலை மற்றும் பண்பாட்டு நிகழ்வுகள்**
    a. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.
    b. பரிசுகள் வழங்க உள்ளூர் வளங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.
5. **திரைப்படம் திரையிடுதல்** – மாற்றுத்திறன் குழந்தைகள் தொடர்பான திரைப்படங்கள் அனைத்து பள்ளிகளிலும் திரையிடப்பட வேண்டும். திரையிடப்பட வேண்டிய படம் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்படும்.
6. **சைகை மொழி தமிழ்த்தாய் வாழ்த்து**
    a. சைகை மொழி தமிழ்த்தாய் வாழ்த்து காணொளி அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பிவைக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டு நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளையும் உள்ளூர் ஊடகங்களை பயன்படுத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வை பெருமளவில் கொண்டு சேர்க்க முயற்சித்தல் வேண்டும்.

மாற்றுத்திறனாளி குழந்தைகளைக் கண்டறிதல் மற்றும் பள்ளியில் சேர்த்தல் குறித்த மாபெறும் தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மாற்றுத்திறனாளி

குழந்தைகளுக்கான ஏதுவான சூழலை ஏற்படுத்தும் நோக்கில் விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை பண்பாட்டு நிகழ்ச்சிகள் மேற்குறிப்பிட்டவாறு திட்டமிட்டு செயல்படுத்தவும் அந்நிகழ்வுகளை முறையாக ஆவணப்படுத்தவும் (புகைப்படங்கள், காணொளிகள், உள்ளூர் பத்திரிக்கைகள் மற்றும் அறிக்கை) அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:**

1. Annexure 1 – உறுதிமொழி
2. Annexure 2 – Banner design (annexed separately)
3. Annexure 3 – Slogans for placards
4. Annexure 4 – Art & Culture (Origami) School Level
5. Annexure 5 – IE Centres – Art & Culture activity
6. Annexure 6 –Games / Sports activities
7. Annexure 7 – Certificate for Inclusive Sports activity at IE centres (annexed separately)
8. Annexure 8 – Movie Screening (Details will be shared later)
9. Annexure 9 – சைகை மொழி தமிழ்த்தாய் வாழ்த்து (Video will be shared later)

10/11/22

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
வேலூர் மாவட்டம்.

**பெறுநர்:**

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம். (அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை/மேநிலைப் பள்ளிகளிலும் சிறப்பான முறையில் மேற்கண்ட நிகழ்வுகளை செயல்படுத்துதல் பொருட்டு)
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம். (அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளிலும் சிறப்பான முறையில் மேற்கண்ட நிகழ்வுகளை செயல்படுத்துதல் பொருட்டு)
3. அனைத்து வகை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் (தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை) உரிய வழியாக.
4. அனைத்து ஒன்றிய வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
5. அனைத்து ஒன்றிய வட்டார மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம். (IE–மையங்களில் / வட்டார வளமையங்களில் சிறப்பான முறையில் மேற்கண்ட நிகழ்வுகளை செயல்படுத்துதல் பொருட்டு)
6. அனைத்து ஆசிரியப் பயிற்றுநர்கள், சிறப்பாசிரியர்கள் மற்றும் இயன்முறை பயிற்சியாளர்கள் (மேற்பார்வையாளர்கள் (பொ) மூலமாக).
7. அனைத்து ஒன்றிய வட்டார கணக்காளர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு கணக்காளர்கள் (மேற்பார்வையாளர்கள் (பொ) மூலமாக).

**நகல்:**

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்
   அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், வேலூர் மாவட்டம்
   அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.